ஒஎஸ்.எண்.20/2012

அய்யம்மாள் (வாசா1)

குறுக்குவிசாரணை தொடர்ச்சி (14ம் பிரதிவாதி தரப்பில்) 12.07.2019

அய்யப்ப நாயக்கரின் பெண் மக்கள் 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் இல்லை. என் தாயார் ஆவுடைத்தாய் 2011ம் வருடம் இறந்தவிட்டார். தேதி ஞாபகம் இல்லை. என் தாயாருக்கு யார் யார் வாரீசு என்பதை காட்டுவதற்கு நான் நீதிமன்றத்தில் வாரீசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தாயார் இறந்த பிறகு நான் 3ம் அயிட்ட சொத்தை நான் அனுபவம் செய்து வருவதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து என் பெயரிலோ அல்லது என் உடன்பிறந்தவர்கள் பெயரிலே எந்த ஆவணமும் இல்லை என்றால் இருக்கிறது. 3ம் தபசில் சொத்து எனக்கோ அல்லது என் உடன்பிறந்தவர்களுக்கோ சட்டப்படி பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. 3ம் தபசில் சொத்தில் உள்ள 5, 6 அயிட்ட சொத்துக்கள் ஆதியில் காமாட்சி செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. காமாட்சி செட்டியார் என்பவரிடம் இருந்து சுப்பையா நாயக்கர் என்பவர் வாய்மொழியாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. சுப்பா நாயக்கர் இறந்த பிறகு அவரது மகன் 13ம் பிரதிவாதி ஐயப்ப நாயக்கர் 3ம் தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. ஐயப்ப நாயக்கர் 3ம் தபசில் 5, 6 அயிட்ட சொத்திற்கு பட்டா எண். 61 பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் இல்லை. ஐயப்ப நாயக்கரிடம் இருந்து 11ம் பிரதிவாதி வெள்ளத்துறை மேற்படி சொத்தை பொறுத்து 23.12.2010 அன்று பதிவு கிரையம் பெற்றுவிட்டார் என்று சொன்னால் இல்லை. 3ம் தபசில் 5ம் அயிட்ட சொத்து எனக்கோ என் உடன்பிறந்தவர்களுக்கோ பாத்தியப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 13ம் பிரதிவாதி 10.06.2013 அன்று இறந்துவிட்டார் என்றும் அதை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 11ம் பிரதிவாதியின் வாரீசுகளை இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3ம் தபசில் 5, 6 அயிட்ட சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும் 11ம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் தபசில் 5, 6 அயிட்ட சொத்தில்

எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்) M. அகிலா தேவி
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.